MAY 2025 **P/ID 35324/PTL3P**

Time : Three hours Maximum : 80 marks

பகுதி அ — (10 × 2 = 20 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு 50 சொற்களில் விடை தருக.

1. சாசனங்கள் என்றால் என்ன?

2. விளக்குக: மணிப்பிரவாள நடை

3. சேனாவரையர் எங்ஙனம் போற்றப் பெற்றார்?

4. உரைக்கு உரை எழுதப்பட்ட நூல் எது?

5. கண்ணழித்தல் என்றால் என்ன? சான்று தருக.

6. குறிப்பு வரைக:- சங்கிலி நடை

7. உரைகள் குறித்த ரிஸ் டேவிட்ஸ் அம்மையாரின் கூற்றினை எழுதுக.

8. எட்டி என்றால் என்ன?

9. திகம்பர ஜைனர் என்போர் யார்?

10. திருக்குறளுக்கு உரையெழுதியவர்கள் யார் யார்?

11. உரையாசிரியர்கள் என்ற நூலினை எழுதியவர் யார்?

12. குறிப்பு வரைக:- ஆறுமுக நாவலர்.

பகுதி ஆ — (5 × 6 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு 250 சொற்களில் விடை தருக.

13. உரைநடை இல்லாத காலமும் அதற்கான காரணமும் குறித்தெழுதுக.

14. பழந்தமிழ் மீட்சி இயக்கம் என்றால் என்ன? விளக்குக.

15. தொல்காப்பியர் கூறும் உரை வகைகள் எவையெவை? விளக்குக.

16. உரைகளின் பல்வகைப் பயன்களைப் பட்டியலிடுக.

17. இளம்பூரணர் கொண்ட பாடவேறுபாடு மற்றும் கருத்து வேறுபாடுகளைச் சான்றுகளுடன் விளக்குக.

18. திருக்குறளின் பரிதியாரின் உரைமரபுக்குச் சான்று தந்து விளக்குக.

19. உரையாசிரியர்களின் தகுதிகள் மற்றும் பண்புகள் குறித்து மதிப்பிடுக.

பகுதி இ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு 500 சொற்களில் விடை தருக.

20. உரைநடையின் தோற்றமும் வளர்ச்சி குறித்துக் கட்டுரைக்க.

21. உரையாசிரியர்கள் திறனாய்வாளர்களா? விவாதிக்க.

22. நச்சினார்க்கினியரின் உரைத்திறன்களைச் சான்றுடன் விளக்குக.

23. பரிமேலழகரின் உரைமரபுகளைத் தெளிவுறுத்துக.

24. அடியார்க்கு நல்லாரின் சிலப்பதிகார உரைத்திறன்களை ஆய்க.

———————